**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# CP 27 /2019

**Deposition of RW1**

Name : **சந்திரசேகரன்** Husband / Father's Name :

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Thiru. M. Raju, Bench Clerk Grade-I of this court on 08.12.2022 in accordance with Provisions X of Evidence Act 1872.

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில்எதிர் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை மற்றும் ஆவணங்கள் சம்பந்தமாக எனக்கு முழுமையாக தெரியும் என்றால் தெரியும். மனுதாரரின் ஓய்வூதிய கணக்கீட்டிற்கு 30 ஆண்டுகள் தகுதியான பணிக்காலம் என்றால் சரி. நிர்வாகத்தரப்பு பதிலுரையில் 4 ஆவது பத்தியில் பழைய சம்பளம் ரூ 13310 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதுபோலு பென்சன் பேசிக் என்பது ரூ 7955/- என்று குறிப்பிட்ப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் 1/3 பென்சன் பேசிக் -ல் ரூ 2652 என்றும் Reduced பென்சன் ரூ 5303 என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ 4 ஓய்வூதிய வழங்கல் ஆணையில் அடிப்படை சம்பளம் ரூ 13300 என்றும் மொத்த ஓய்வூதியம் ரூ 7950 என்றும் ஒப்படைப்பு தொகை 1/3 பங்கு ரூ 2650 என்றும் நிகர ஓய்வூதியம் ரூ 5300 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ 4 ல் கடைசி

பக்கத்தில் குறிப்புரை என்ற தலைப்யில் மருத்துவ மற்றும் பஞ்சப்படி ஓய்வூதிய விதிகளின் படி வழங்கப்படும் என்று குறிப்பபிடப்பட்டுள்ளது என்றால் சரி.மனுதாரர் மனுவை ஜீலை 2013 முதல் ஜீன் 2019 வரை காலத்திற்கு ஓய்வூதியம் மற்றும் கூட்டுத்தொகையை கணக்கிட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ 8 ல் 47 ஆவது பக்கத்தில் மனுதாரருக்கு 26.06.2012 முதல் தர ஊதியம் ரூ 4,300 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அதற்கு அடுத்த வரியில் அடிப்படை சம்பளம் ரூ 13,360 , தர ஊதியம் ரூ 4,300 , 01.05.2013 முதல் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ஓய்வூதிய விதிகளுக்கும் , ஒப்பந்த விதிகளுக்கு புறம்பாக பிறப்பிக்கப்படும் நிர்வாக உத்தரவுகள் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அகவிலைப்படி வழங்க கூடாது என்று வழக்கு தொடரப்பட்டுள்ளதா என்றால் இல்லை, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தற்போது அகவிலைப்படியை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது. அந்த வழக்குகளில் இம் மனுதாரரோ அல்லது இந்த எதிர்மனுதாரோ தரப்பினராக இல்லை என்றால் சரி. அரசாணை எண் 142 , 26.08.2019 ஆம் தேதி வெளியிடப்பட்டது என்றால் சரி. 2019 ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்து 2018 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்குகள் அரசாணையை எதிர்த்து போடப்பட்டதாக இந்நீதிமன்றத்தில் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த பிரமாண வாக்குமூலம் 4 ஆவது பத்தியில் முதல் பாதி அட்டைவணையில் ஓல்டு பேசிக் ரூ 13,310 என்றும், கிரேடு pay ரூ 2, 600 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதிலுள்ள அடுத்த பாதியில் ரூ 13360 என்றும் , தர ஊதியம் ரூ 4300 என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான்,

அது New Basic ஆகும்.



Old Basic ரூ 13310, Grade Pay ரூ 2600 அடிப்படையில் எப்போது முதல் வழங்கப்பட்டுள்ளது என்றால் 08/2016 முதல் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் ஓய்வு பெற்ற மாதம் 30.06.2013 என்றால் சரி. அவருக்கு 7 /2016 ல் கிடைக்ககூடிய ஓய்வூதியம் 8 ஆவது மாதத்தில் கிடைக்ககூடியது என்றால் சரி. 07/2013 கான ஓய்வூதியம் 08/2013 ல் வழங்கப்பட வேண்டும் என்றால் சரி. 08/2013 வழங்கிய ஓய்வூதியம் எந்த கணக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது என்றால் அடிப்படை சம்பளம் ரூ 13310 , தரஊதியம் ரூ 2600, என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் சரி. ம.சா.ஆ 4 ல் அடிப்படை சம்பளம் ரூ 13300 , தர ஊதியம் ரூ 2600 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. எ.ம.சா.ஆ 2 ல் முதல் பத்தியில் 1/3 கமுட்டேசன் ரூ 2943 திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. பென்சன் பேசிக் ரூ 8830 ல் இந்த ரூ 2943 ஐ கழித்து வரும் தொகை Reduced Pension என்பது சரியா என்றால் சரி. ரூ 8830 ஐ ரூ 2943 கழித்தால் வரும் தொகை ரூ 5887 என்பது சரியா என்றால் சரி. ஆனால் நான் ரூ 6178 என்று பொய்யான கணக்கீட்டை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூ 6178 என்பது சரியசெய்யப்பட்டு ரூ 6153 என்று திருத்தம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. நிர்வாத்தரப்பு ஆவணங்களாள பணிப்பதிவேடு, ஓய்வூதிய வழங்கல் ஆணை ஆகியவற்றில் ரூ 13300 அடிப்படை சம்பளம் என்று உள்ள போது நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் ரூ 13310 என்று பொய்யாக கூறி பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பணிப்பதிவேட்டில் அடிப்படை சம்பளம் ரூ 13310 என்று தான் உள்ளது . பணிப்பதிவேடு பக்கம் 47 ல் ரூ 13300 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதிய நம்பக விதி 20 ஏ பிரிவின் படி அரசு அறிவிக்கும் படியை ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

**மறுவிசாரணை - இல்லை**

Sd/-Tmt. S.Sumathy,
Presiding Officer,
Labour Court, Salem.